கழக இளைஞர் அணி சார்பில் நடத்தப்பட்ட முத்தமிழறிஞர் கலைஞரின் 102-வது பிறந்த நாள் விழா மற்றும் திராவிட மாடல் அரசின் 4 ஆண்டு

# சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!



கம்பைநல்லூர் பேரூர்,
தருமபுரி மேற்கு மாவட்டம்.



ஜெயங்கொண்டம் மேற்கு ஒன்றியம்,
அரியலூர் மாவட்டம்.



கோபிச்செட்டிப்பாளையம் மத்திய ஒன்றியம்,
ஈரோடு வடக்கு மாவட்டம்.



கொடைக்கானல் மத்திய ஒன்றியம்,
திண்டுக்கல் கிழக்கு மாவட்டம்.



கோபாலசமுத்திரம் பேரூர் கழகம்.
திருநெல்வேலி கிழக்கு மாவட்டம்.



தொரப்பாடி பகுதி,
வேலூர் மாவட்டம்.

## ஜெர்மனி, இங்கிலாந்து நாடுகளுக்கு அரசு முறைப் பயணம் மேற்கொண்டு

# ரூ.15,516 கோடி தொழில் முதலீடுகளை கொண்டு வந்த முதல்வருக்கு நன்றி - பாராட்டு!

### விழுப்புரம் வடக்கு மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம்! அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் - செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றினர்!




செஞ்சி, செப்.10 –

தமிழ்நாட்டுக்கு புதிய தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக ஜெர்மன்,இங்கிலாந்து நாடுகளுக்கு அரசு முறை பயணம் மேற்கொண்டு 15,516 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொழில் முதலீடுகளை ஈர்த்து 17,613 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கிட புத்துணவு ஒப்பந்தங்களை நிறைவேற்றியும், ஆக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தில் தந்தை பெரியாரின் திரு உருவப் படத்தைதிறந்து வைத்து சிறப்புரை ஆற்றி தமிழகம் திரும்பிய தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் தனது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றினர்.

மண்டல பொறுப்பாளர், அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளரும், முன்னாள் அமைச்சருமான செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு ஆலோசனைக் கூட்டம் செஞ்சியில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு விழுப்புரம் வடக்கு மாவட்ட அவை தலைவர் டாக்டர் ப. சேகர் தலைமை தாங்கினார்.தேர்தல் தொகுதி பார்வையாளர்கள் மயிலம் தொகுதி இள.புகழேந்தி, திண்டிவனம் தொகுதி ஜாபர் அலி, செஞ்சி தொகுதி கார்த்திகேயன், மாவட்ட துணை செயலாளர்கள் ரவிக்குமார், அருணகிரி, அமுதா ரவிக்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

செயற்குழு உறுப்பினர்,செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் அனைவரையும் வரவேற்றார்.

கூட்டத்தில் விழுப்புரம் மண்டல பொறுப்பாளரும், உழவர் நலன் மற்றும் வேளாண்மை துறை அமைச்சருமான எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளரும், முன்னாள் அமைச்சருமான செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றினர்.

கூட்டத்தில் மண்டல பொறுப்பாளர் அமைச்சர் எம். ஆர்.கே. பன்னீர்செல்வம் பேசுகையில்:

எதிர்வரும் 2026 சட்டமன்றத் தேர்தலில் நாம் அனைவரும் ஒன்றாக இணைந்து தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள் செய்த சாதனைகளை வீடு வீடாக எடுத்து சென்று கூற வேண்டும்.

கடுமையாக உழைத்தால் தான் அனைவருக்கும் தகுந்த நேரத்தில் பதவி வரும். கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் கடுமையான உழைப்பினால் தான் இன்று முதலமைச்சராக உள்ளார் முதலமைச்சராக பொறுப்பேற்றவுடன் தமிழ்நாட்டு மக்களுக்கு தேவையான பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள செஞ்சி, மயிலம், திண்டிவனம் மூன்று தொகுதிகளிலும் தி.மு.க. வெற்றி பெற வேண்டும். அதற்கு நாம் அனைவரும் ஒன்றிணைந்து கடுமையாக உழைக்க வேண்டும். 'ஓரணியில் தமிழ்நாடு' புதிய உறுப்பினர் சேர்க்கையில் செஞ்சி, மைலம், திண்டிவனம் ஆகிய மூன்று தொகுதிகளிலும் 50 சதவீதம் உறுப்பினர்களை கழக நிர்வாகிகள் சேர்த்துள்ளனர். புதிய உறுப்பினர்கள் அனைவரையும் வாக்குகளாக மாற்றுவதற்கு தீவிரமாக பணியாற்ற வேண்டும். கழக நிர்வாகிகள் சுறுசுறுப்புடன் கடமை உணர்வுடன் தேர்தல் பணியாற்றுவதற்கு தங்களை தயார் படுத்தி கொள்ள வேண்டும்.

செப்டம்பர் 15ஆம் தேதி பேரறிஞர் அண்ணாவின் பிறந்தநாளை தி.மு.க. வினர் சீரும் சிறப்புமாக கொண்டாட வேண்டும். 17ஆம் தேதி கரூரில் நடைபெறும் கழக முப்பெரும் விழாவில் விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் இருந்து கழகத்தினர் குடும்பம் குடும்பமாக பங்கேற்க வேண்டும்.

ஊர் கூடி தேர் இழுக்க வேண்டும். எல்லோரும் சேர்ந்து உழைக்க வேண்டும் அப்போதுதான் எதிர்வரும் 2026 ஆம் ஆண்டுநடைபெறும் சட்டமன்றத் தேர்தலில் தமிழ்நாட்டில் உள்ள 234 தொகுதிகளிலும் தி.மு.க. வெற்றி பெறுவது உறுதியான அவர் உறுதிபட தெரிவித்தார்.

முன்னதாக விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளரும்,முன்னாள் அமைச்சருமான செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. பேசுகையில்:

தமிழ்நாட்டுக்கு புதிய தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக ஜெர்மன் மற்றும் இங்கிலாந்து நாடுகளுக்கு அரசு முறை பயணம் மேற்கொண்டு 15,516 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொழில் முதலீடுகளை ஈர்த்து 17,613 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கிட புத்துணர்வு ஒப்பந்தங்களை நிறைவேற்றி பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியாரின் திருவுருவப் படத்தை ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் திறந்து வைத்து சிறப்புரை ஆற்றி தமிழகம் திரும்பி மக்கள் முதல்வர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் தனது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொண்டார்.

கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன், செந்தமிழ் செல்வன், தலைமை தீர்மானக் குழு உறுப்பினர் செஞ்சி சிவா, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் நெடுஞ்செழியன், சீனிராஜ், மாநில பொதுக்குழு உறுப்பினர்கள் கதிரேசன், மணிவண்ணன், வீடு ரவி, பாலகிருஷ்ணன், சாந்தி ஏழுமலை, ஒன்றியக் கழகச் செயலாளர் சொக்கலிங்கம், அண்ணாதுரை, ராஜா ராமன், தயாளன், பழனி, ரவிச்சந்திரன், மணிமாறன், செழியன், துரை, இளம்வழுதி, பச்சையப்பன், விஜயராகவன், சாந்தி சுப்பிரமணியன், திண்டிவனம் நகர செயலாளர் ஆசிரியர் கண்ணன், செஞ்சி பேரூராட்சி மன்றத் தலைவர் மொக்தியார் அலிமஸ்தான், அனந்தபுரம் பேரூராட்சி மன்றத் தலைவர் முருகன், மாவட்ட அணி அமைப்பாளர்கள் ஆனந்த், கோபிநாத், பிரசன்னா, திலகவதி, ராஜசக்தி, கே.எஸ்.அன்சாரி, திருமலை, ரவிச்சந்திரன், டாக்டர் சக்தி பிரியன், கே.அண்ணாதுரை, ஜி. எஸ் .செந்தில் முருகன் , கே. எஸ். செந்தில்குமார், பா.செந்தில் குமார், தமிழரசன், விஜயராகவன், சிவகாமி ,காதர் நவாஸ், ரோமியன், மாவட்ட கவுன்சிலர்கள் அரங்க ஏழுமலை, அகிலா பார்த்திபன், அன்பு செழியன், முன்னாள் மாவட்ட துணைச் செயலாளர் அசோகன் உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், ஊராட்சி கழக நிர்வாகிகள்,அணி நிர்வாகிகள், தொ.மு.ச. நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். செஞ்சி நகரச் செயலாளர் கார்த்திக் நன்றி கூறினார்.

கூட்டத்தில் தமிழ்நாட்டுக்கு புதிய தொழில் முதலீடுகளைஈர்ப்பதற்கு ஜெர்மன் மற்றும் இங்கிலாந்து நாடுகளுக்கு அரசு முறை பயணம் மேற்கொண்டு ரூபாய் 15 ஆயிரத்து 516 கோடி தொழில் முதலீடுகளை ஈர்த்து 17,613 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கிட புத்துணர்வு ஒப்பந்தங்களை நிறைவேற்றி பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களின் திருவுருவப்படத்தை ஆக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தின் திறந்து வைத்து சிறப்புரை ஆற்றி தமிழகம்திரும்பிய தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் தனது நெஞ்சார்ந்த நன்றியையும், பாராட்டுகளையும்தெரிவித்தும்,

விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் செஞ்சி, மயிலம், திண்டி வனம், ஆகிய மூன்று சட்டமன்றத் தொகுதிகளிலும் செப்டம்பர் 15ஆம் தேதி அண்ணா பிறந்த நாளில் ஒன்றிய நகர பேரூர் மற்றும் கிளைக் கழகங்களில் இரு வண்ணக் கழக கொடியை ஏற்றி இனிப்புகள் வழங்கிடவும் ஏழை எளியவர்களுக்கு அன்னதானமும் நலத்திட்டங்கள் உதவிகள் வழங்கி சிறப்பாக கொண்டாடுவது எனவும்,

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் தலைமையில் செப்டம்பர் 17 திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கரூரில் நடைபெறும் கழகம் முப்பெரும் விழாவிற்கு விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி, மயிலம் ,திண்டிவனம் ஆகிய தொகுதிகளிலிருந்து பெருமளவில் கழக நிர்வாகிகளும் கழக உடன்பிறப்புகளும் கலந்து கொள்வது எனவும் , விழுப்புரம் வடக்கு மாவட்டத்தைச் சேர்ந்த செஞ்சி மயிலம் திண்டிவனம் ஆகிய தொகுதிகளில் இருந்து வாக்குச்சாவடி முகவர்கள் பி.எல்.ஏ. 2,பி.எல்.சி. ஒன்றிய நகர பேரூர் வரை அனைத்து வாக்குச்சாவடிகளிலும் பாக முகவர்களை சரிபார்ப்பது எனவும், விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி, மயிலம், திண்டிவனம் ஆகிய மூன்று சட்டமன்றத் தொகுதிகளில் உள்ள அனைத்து ஒன்றிய நகர பேரூர் வாரியாக தேர்தல் பணி குழு அமைப்பது எனவும், கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் மற்றும் மண்டல பொறுப்பாளர்,அமைச்சர் எம்.ஆர். கே.பன்னீர்செல்வம் அவர்களும் எதிர்வரும் சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு கழகத்தின் சார்பாக இடுகின்ற அனைத்து பணிகளையும் மாவட்டக் கழகப் பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தலைமையில் அரவணைத்து சிறப்பாக செயல்படுவது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



திருக்கோவிலூர் சட்டமன்றத் தொகுதி திருவெண்ணெய்நல்லூர் பேரூராட்சியில் (வார்டு 4) / (வார்டு 7) ஆகிய வார்டுகளில் புதியதாக கட்டப்பட்ட அங்கன்வாடி கட்டிடங்களை முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ. திறந்து வைத்தார். மாவட்ட ஆட்சியர் ஷேக் அப்துல் ரகுமான், விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி , மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், ஒன்றியச் செயலாளர் பி.வி.ஆர்.சு.விசுவநாதன், நகரச் செயலாளர் பூக்கடை கணேசன், பேரூராட்சி தலைவர் அஞ்சுகம் கணேசன், ஒன்றியக் குழுத் தலைவர் ஓம்சிவசக்திவேல், பேரூராட்சி துணைத் தலைவர் ஜோதி மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.




# தி.மு.க. இளைஞர் அணி

## காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம்
## செங்கல்பட்டு சட்டமன்றத் தொகுதி நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம்!

மாவட்டம்–மாநகரம்–ஒன்றியம்–நகரம்–பகுதி–பேரூர் ஆகிய கழக அமைப்புகளில் இளைஞர் அணிக்கு ஏற்கெனவே நிர்வாகிகள் நியமிக்கப்பட்டுள்ள நிலையில், கழகத்தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில், தலைமைக்கழக ஒப்புதலுடன் தற்போது ஒன்றியத்துக்கு உட்பட்ட கிளைகளிலும் நகர–பகுதி–பேரூர் வட்டங்களிலும் மற்றும் அனைத்து பாகங்களிலும் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் நியமிக்கப்பட்டு வருகின்றனர்.

அந்த வகையில், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்துக்கு உட்பட்ட செங்கல்பட்டு சட்டமன்றத் தொகுதியில் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள வார்டு, கிளை, பாக இளைஞர் அணி நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், கழக இளைஞர் அணிச் செயலாளர் – மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில், 10.09.2025 புதன்கிழமை காலை 10.00 மணியளவில், கலைஞர் விளையாட்டுத் திடல், மறைமலைநகரில் நடைபெறவுள்ளது. செங்கல்பட்டு சட்டமன்றத் தொகுதியைச் சேர்ந்த இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

அன்பகம்
தேனாம்பேட்டை,
சென்னை-18.
நாள் : 09-09-2025

கலைஞர் 100 1924 - 2023




# வேலூர் மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



*வேலூர், செப். 10-*

*வேலூர் மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-*

*வேலூர் மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் தி.அ.முகமதுசகி தலைமையில் 12.09.2025 வெள்ளிக்கிழமை அன்று மாலை 04.00 மணியளவில் வேலூர் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் நடைபெற உள்ளது.*

*இக்கூட்டத்தில் கீழே குறிப்பிட்டுள்ள பொருள் குறித்து விவாதிக்கப்பட உள்ளது. எனவே வேலூர் மாவட்ட தி.மு.க. விற்குட்பட்ட மாவட்ட நிர்வாகிகள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் தலைமைக் கழக நிர்வாகிகள் ஆகியோர் அனைவரும் தவறாமல் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.*

*பொருள்:*

*பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் 117 வது பிறந்த நாள் மற்றும் சமத்துவ பெரியார் அவர்களின் 147வது பிறந்தநாள் கொண்டாடுவது,*

*17.09.2025 கரூரில் நடைபெற உள்ள கழக முப்பெரும் விழாவில் கலந்து கொண்டு சிறப்பிப்பது,*

*கழக ஆக்கப் பணிகள்.*

*இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.*